# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.56/2022.
Prosecution witness for P.W.7.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜேந்திரன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024.

A1 died. A2 absent. 317 Cr.PC. Petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது கொட்டாரக்குறிச்சியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன முத்துவை தெரியும். வழக்கு பற்றி தெரியும். உடன்குடி அருகில் மணிநகரில் சுடலைமாடசாமி கோவிலில் நான் பூஜை செய்து வருகிறேன். 05.07.2016 அன்று காலை 7 மணியளவில் பக்கத்து தோட்டத்துக்காரரான இந்திராணி என்பவர் என் தம்பி குமாருக்கு கைபேசி மூலம் கோவில் திறந்திருப்பதாகவும், உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதாகவும், சில்லரைகள் சிதறி கிடப்பதாகவும், மூக்கம்மாள் என்பவர் அடிபட்டிருபபதாகவும், அவரை மருத்துவமனைக்கு ஏற்றி சென்றிருப்பதாகவும், முத்து என்பவர் வாய், கை கட்டப்பட்டு இறந்து கிடப்பதாகவும் தகவல் சொன்னார். என் தம்பி அதுகுறித்து எனக்கு கைபேசி மூலம் தகவல்சொன்னார். நான் காலை 11 மணியளவில் மேற்படி கோவிலுக்கு சென்றேன். அங்கு காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் போலீசார், கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்தார்கள். மேற்படி முத்து காவலாளியாக மேற்படி கோவிலில் பணி செய்ததாக போலீசாரிடம் சொன்னேன். பின்னிட்டு ஆம்புலன்ஸ் மூலம் முத்துவின் உடல் பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். மூக்கம்மாள் மேற்படி கோவிலில் துப்புரவு வேலை செய்து வந்தார். உண்டியலில் இருந்த பணத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். சில்லரை

மட்டும் கிடந்தது. நான் சென்று பார்க்கும்போது மேற்படி பிரேதத்தில் இடது கண் புருவத்தில் காயம் இருந்தது. மூக்கில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்தது. கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தது. பிரேதம் பிறந்த மேனியாக இருந்தது. ஆணுறுப்பிலிருந்து விந்து வெளியாகி இருந்தது. வாய் கட்டப்பட்டிருந்தது. மேற்படி சம்பவம் குறித்து அசா1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2024.12.05 18:37:32 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.